**தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைத் சமர்ப்பித்தல்

மாவட்ட செயலகத்தினால் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் கீழே காட்டப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 02 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக புதிய நிதிக்கூற்றுத் தொகுதிகள் தயாரிக்கும் போது உருவாகிய சிக்கல்கள் காரணமாக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | | |
| 26001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 28 ஆந் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் இணக்கக் கூற்றுக்களின் இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நவடிக்கை | 2018 ஆம் ஆண்டிற்காக புதிய நிதிக்கூற்றுத் தொகுதிகள் தயாரிக்கும் போது உருவாகிய சிக்கல்கள் காரணமாக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் |

| | | |
|---|---|---|
| திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 06 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | கொள்ளப்பட்டது. |

**1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் கைதவிர்க்கப்பட்ட கிரயம் இனங்காண முடியாத 257 நடைமுறையல்லாத சொத்து உருப்படிகள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருகக்வில்லை. | கணக்கில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையால் கணக்கில் கைதவிர்ப்பின் கீழ் காண்பிக்கப்பட வில்லை. |

**1.6.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள மீண்டெழும் கொடுப்பனவாக ரூபா 971,886,868 தொகை வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் சரியான மீதி ரூபா 964,871,360 ஆக இருந்தமையால் ரூபா 7,015,508 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சரியான பெறுமதி கணக்கில் காண்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் பெறுவனவு மற்றும் கொடுப்பனவிற்காக 260011 மற்றும் 260012 இல் குறிப்பிடப்பட்ட பெறுமதி ஒன்றிணைக்கப்பட்டு காண்பிக்கப்பட வேணுடிய போதிலும் 260011 இன் பெறுமதிகள் மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டு கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கப்படும் |

**(இ) ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நுவரெலியா பிரதேச செயல கத்திற்குரிய எந்தவொரு சொத்தும் நிதியல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நுவரெலியா பிரதேச செயலகத்தின் தரவுகள் உள்ளடக்கப்பட்ட போதும் சமப்படுத்தாமையால் அத்தரவுகள் அகற்றப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் தரவு உள்ளடக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) பிரதான விலை மதிப்பீட்டாளரின் 2017 நவம்பர் 08 ஆந் திகதி CL/SA/DS/NE/01 ஆம் இலக்க கடிதத்தில் மாவட்ட செயலகம் அமைந்துள்ள கட்டிட வளவு ரூபா 633,250,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 1,167,388 என ரூபா 632,082,612 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்கள் தற்போதய மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட வேண்டும் | மாவட்ட செயலக கட்டிடத்தின் பெறுமதி குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. உள்ளடக்கப்பட்ட பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளதால் 2019 ஏப்ரல் மாதத்தின் போது மீண்டும் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றம் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,072,887,249 என குறிப்பிடப்பட்டிருந்த | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட | ஏ சீ ஏ 6 மாதிரியின் நிரல்களாக கூட்டுத்தொகை பதிவுசெய்வதில் தவறொன்று இருந்தமையால் திறைசேரியின் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் திறைசேரியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1,150,387,393 ஆக இருந்தமையால் ரூபா 77,500,144 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேண்டும். | வேறுபட்டது. |
| (iv) | திறைசேரியின் சொத்துக்ககள் அறிக்கையின் பிரகாரம் ரூபா 79,150,000 தொகையான காணிகளின் பெறுமதி அப்பெறுமதி நடைமுறை யல்லாத சொத்துக்கள் அசைவுக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்ட்டு சரியான கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தின் காணியின் கீழ் ரூபா 54,750,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்காமையால் கணக்குகளுக்கு உள்ளடக்கப்படவில்லை. |
| (v) | ஏ சீ ஏ 6 மாதிரியின் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் வீடுகளல்லாத கட்டிடங்களின் பெறுமததி ரூபா 157,818,570 எனகாண்பிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் அப்பெறுமதி ரூபா 155,852,339 ஆக இருந்தமையால் ரூபா 1,966,231 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்ட்டு சரியான கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஏ சீ ஏ 6 மாதிரியின் நிரல்களாக கூட்டுத்தொகை பதிவுசெய்வதில் தவறொன்று இருந்தமையால் திறைசேரியின் பெறுமதி வேறுபட்டது. |
| (vi) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியின் போக்குவரத்து உபகரண சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 78,904,834 ஆக இருந்த போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான விரிவான கூற்றில் அப்பெறுமதி ரூபா 78,774,550 ஆக இருந்தமையால் ரூபா 130,284 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்ட்டு சரியான கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | திறைசேரியில் ஆண்டின் ஆரம்ப மீதி ரூபா 78,774,550 ஆக இருப்பதால் ஆன வேறுபாடொன்று காணப்படவில்லை. |
| (vii) | வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் திறைசேரியின் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 92,799,626 ஆக இருந்த போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அப்பெறுமதி ரூபா | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்ட்டு சரியான கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஏ சீ ஏ 6 மாதிரியின் நிரல்களாக கூட்டுத்தொகை பதிவுசெய்வதில் தவறொன்று இருந்தமையால் திறைசேரியின் பெறுமதி வேறுபட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 178,845,643 ஆக இருந்தமையால் ரூபா 86,046,017 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | | |
| (viii) | நடைமுறை வேலைகளாக திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் ரூபா 28,944,283 ஆன பெறுமதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத அசையும் விரிவான அறிக்கையில் நடைமுறை வேலைகளாக பெறுமதிகள் காண்பிக்கப்படவில்லை. | வேறுபாடுகளுக்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சரியான கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் மீண்டும் உள்ளடக்கபட்டது. |

**(ஈ) ஏனைய**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கொடுப்பனவு மற்றும் பொது வைப்புக் கணக்கில் கொடுப்பனவு வெவ்வேறாக பேணப்படாமல் பிரதான பேரேடு செலவினமாகவும் அக்கணக்கு களுக்குரிய பெறுவனவு வருமானம் அல்லாத பெறுவனவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீண்டும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகின்றது. |

**(உ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

மாவட்ட செயலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | பொருள் உபரணங்கள் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் 11 கிராம சேவையாளர் அலுவலகங்களில் பொருட்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | 44 ஆவது பொது மாதிரியின் பிரகாரம் பொருட் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்திக் கொள்வதாக அறியத் தருகின்றேன் |
| (ii) | <u>**குடும்ப தகவல் உள்ளடக்கப்பட்ட பதிவேடு**</u> | | |

| | | |
|---|---|---|
| 04 பிரதேச செயலக பிரதேசங்களில் 20 கிராம சேவையாளர்களால் குடும்பங்களின் தகவல் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கிராம சேவையாளர் கைநூலின் பிரகாரம் குடும்ப தகவல் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்திக் கொள்வதாக அறியத் தருகின்றேன் |

**(ஊ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 பிரதேச செயலகங்களில் ரூபா 6,081,640 கூட்டுத்தொகையான 05 வீதி நிர்மாண வேலைகளின் பட்டியல்களில் அளவு வீதியின் முழு நீளம், அகலம் மற்றும் தடிப்பு ஒரே பெறுமதியாக அளவீடுகள் எழுதப்பட்டிருந்த போதிலும் வீதிகள் பௌதீக ரீதியாக ஒரே அகலத்திலும் தடிப்பிலும் இருக்கவில்லை. ஆதலால் பௌதீக ரீதியாக பரீட்சித்து அளவீடுகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பௌதீக ரீதியாக காணப்படும் அளவுகள் பட்டியலில் எழுதப்பட வேண்டும் | பட்டியலில் எழுதும் போது அளவுகள் பௌதீக ரீதியாக பரீட்சிக்க கூடிய வகையில் பட்டியல் எழுதுவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

**(எ) கணக்கீடு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றிதழ்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச மற்றும் மாவட்ட கணககாய்வு முகாமைத்துவ குழுக்களின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளககட கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பராமரித்துச் செல்லல் தொடர்பாக தேவையான ஆலோசணை வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்குள் தயாரித்தல் இடம்பெறுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 1.6.1.(அ),(ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட போதும் அறிக்கை தயாரிக்கும் போது காணப்பட்ட சிக்கலா நிலைமையால் திறைசேரியுடன் கலந்துரையாடி திருத்தப்பட்ட அறிக்கையொன்று மீண்டும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. |

**(ஏ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

-------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுட னான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (I) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | | |
| II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | - | மாவட்ட செயலகத்தினதும் 03 பிரதேச செயலகங்க ளிலும் 86 ஆரம்ப விசாரணைகளின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 73 நாட்கள் முதல் 1460 நாட்கள் வரை காலவீச்சு எடுத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 | புலனாய்வு நடவடிக்கைகளை தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மாவட்ட செயலகத்தி 05, ஹங்குரன்கெ பிரதேச செயலகத்தி 04, கொத்மலே பிரதே செயலகத்தில் உமாக புலனாய் அறிக்கைகள் தற்போ கிடைத்துள்ளதுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெப்ரவரி 9 ஆந் திகதி வரை புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | | அப்பரிநிதுரைகளை செயற்படுத்துவதற்காக உரிய பிரிவுகளுக் அறிவிக்கப்பட்டுள்ளன. |
| (II) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>----------------------------- | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 138(4)(6)(8) | 1,950,177 | மாவட்ட செயலகத்தினாலும் 03 பிரதேச செயலகங்க ளினாலும் பூரணமற்ற தகவல்களுடனான உறுதிச்சீட்டுகளுக்காக 21 சந்தர்ப்பங்களில் ரூபா 1,950,177 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருள் பெறுவன தாமதத்தினால் காசோலை எழு நிறுத்தி வைக்கப்படடுள்ளது. தற்போது உறுதிச்சீட்டிலுள்ள குறைகள் பூர்த் செய்யப்பட்டுள்ளன. |
| (ii) நிதிப் பிரமாணம் 237 | 4,758,242 | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவிற்காக ரூபா 4,758,242 பெறுமதியான 32 காசோலைகள் எழுதி கணக்காய்வுத் திகதியான 2019 சனவரி 31 ஆந் திகதி வரை கையில் வைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பொருட்கள் அலுவலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருட்கள் பெறுவன தாமதத்தினால் காசோலை எழு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது உறுதிச்சீட்டிலுள்ள குறைகள் பூர்த் செய்யப்பட்டுள்ளன. அனைத்து பொருட்களு அலுவலகதிற்கு கிடைத்துள்ளன. |
| (III) பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை<br>------------------------------- | | | | |
| (i) 2014 ஒக்தோபர் 23 ஆந் திதிய HAF-3-PAYMT-04-2 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கிராம சேவையாளர் / சேவையாளர் பெண்கள் பிரிவில் அமைந்துள்ள அலுவலகங்களிலும் வெளிக்கள கடமைகளிலும் சீருடை அணிந்து இலட்சிணையும் அணிந்து கடமை நாட்குறிப்பேட்டைம் எடுத்துச் செல்லுதல் கண்டிப்பாக இருந்த போதும் 04 பிரதேச பிரிவுகளில் பரிசோதனை சந்தர்ப்பத்தில் 36 கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராம சேவையாளர்கள் சீருடை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடமைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அணிந்து இல்லாமல் இருந்ததுடன் 40 கிராம சேவையாளர்கள் உத்தியோக இலட்சிணைகளையும் அணிந்து இருக்கவில்லை. 21 கிராம சேவையாளர் / சேவையாளர் பெண்களின் நாட்குறிப்பபேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2016 ஏப்ரல் 27 ஆந் திதிய HAF-3-ADMIN -04-002 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03(i) | | திங்கட்கிழமை, வியாழக் கிழமைகளில் முழுநாளும் சனிக்கழிமைகளில் பி.ப 12.30 வரையிலும் தமது அலுவலகங்களில் கட்டாயமாக தரித்திருக்க வேண்டிய பொதிலும் பரீட்சிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் 13 கிராமசேவையாளர் அலுவலகங்கள் மூடப்பட்டிருந்ததுடன் அவர்கள் லீவு என அல்லது வேறு கடமையில் ஈடுபட்டிருப்பதாக அறிவித்தல் பலகையில் அறிவித்தலொன்றோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வா மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 09 ஆம் பந்தி | - | பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களால் பொருத்தமான வகையில் குறைந்தது 04 மாதங்களுக்கு ஒரு தடைவ கிராம சேவை அலுவலகமும் மேவுகை செய்யப்படும் வகையில் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் 05 பிரதேச செயலக பிரிவுகளில் 26 சந்த்ர்ப்பங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதை பகுப்பாய்வு செய்த போது 171 நாட்கள் முதல் 1232 நாட்கள் வரையான பாரியளவு காலப்பகுதியில் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரிவு பெரியதாகவு கிராம சேவையாள பிரிவுகளின் எண்ணிக்கை அதிகமாகவும் இருப்பதால் கிராமசேவையாளர் அலுவலகங்களை தனிப்பட்ட ரீதியி பரீட்சிப்பது சிக்கலா காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அவ்வா மேற்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஐ) மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 அகில இலங்கை மாணவர் திறன்களை மதிப்பிட்ம நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமூகமளித்த பிள்ளைகளுக்கு யோகட் மற்றும் பால் பக்கட் வழங்கும் போது 500 யோகட்டிற்காக ரூபா 24,975 ஆன தவறான பட்டியல் சமர்ப்பித்து அரசின் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியதாக ஆரம்ப புலனாய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 14,000 உத்தியோகத்தரொருவரால் 2019 மே 27 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை நடாத்தப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்காகவும் பொறுப்பான நபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடாத்தப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்காகவும் பொறுப்பான நபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொறுப்பானவரை இனங்கண்டு குறித்த அறவீடகளைஅறவிடுமாறு இந்நிகழ்ச்சித்திட்டத்தை மேற்பார்வை செய்த மேலதிக மாவட்ட செயலாளர் காணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது |

## 2. நிதி மீளாய்வு

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு முதல் தீர்வு செய்யப்படாத ரூபா 900,878 ஆன கட்டுநிதி முற்பண மீதி 2017 ஆம் ஆண்டின் தீர்வுசெய்யப்படாத மீதியொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி மீதியை தாமதமின்றி தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திறைசேரியால் முன்னைய ஆண்டுகளின் தீர்வுசெய்யப்படாத கட்டுநிதி மீதியை நடப்பாண்டின் கட்டுநிதிக் கணக்கிற்கு மாற்றுதல் ஆண்டின் போதே மேற்கொள்ளப்படும். அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்படாத ஆண்டு ஆண்டாக முன்கொண்டு வரப்பட்டு 2017 ஆம் ஆண்டின் மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. |

### 2.2. முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் கட்டுநிதி தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 688,632 ஆன கட்டுநிதி யை தீர்வுசெய்வதற்கு 14 நாட்கள் முதல் 225 நாட்கள் வரையான தாமதமான 37 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் திகதிய சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 (5) சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச கணக்காய்வு குழுக்ககளில் கலந்துரையாடி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற | வழங்கப்பட்ட கடனை தாமதமின்றி | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 224,818 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு உத்தியோகத்தர்களும் பகுதி பகுதியாக கொடுப்பனவு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் காலத்தில் சட்டமா அதிபரின் ஆலோசணை கேட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு பரிந்துரைந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 திட்டமிடல்

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், வருடாந்த பாாதீட்டை அடிப்படையாக கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாடு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம், சகல தகவல்களும் உள்ளடக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நுவரெலியா மாவட்ட செயலகத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 5 பிரதேச செயலகங்களையும் ஒன்றிணைத்து இலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்கால திட்டமிடலின் போது 5 பிரதேச செயலகங்களையும் ஒன்றிணைத்துதயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அமையாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ரூபா 399,981 பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட அம்பகமுவ தியசிரிகம வடிகாண் நிர்மாணத்தின் ஒப்பந்த வேலைத்தளம் 2019 சனவரி 24 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது ஒப்பந்தக்காரரால் தடுப்பு மதில் ஒன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் நீர் வழிந்தோடும் வடிகாண் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் நிர்மாண வேலை நிறைவேற்றப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரருக்கு மாவட்ட பொறியியலாளர் குறித்த வடிகாணை அமைக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் நிர்மாணம் மேற்கொள்ளப்படாமையால் தொடர் நடவடிக்கை களுக்காக 2019 ஆம் ஆண்டிற்கு பணம் கோரப்பட்டுள்ளது. |
| மதிலின் அடிப்பகுதி 1.3.6 கலவையில் 1’ அங்குலத்திற்கு கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதிலும் எந்தவொரு இடத்திலும் 1’ அளவிலான கொங்கிரீட் இடப்பட்டிருக்கவில்லை. | பௌதீக ரீதியாக காணப்படும் அளவுகள் பட்டியலில் எழுதப்பட வேண்டும். | இச்செயற்திட்டத்தின் பட்டியல் இரண்டு மாத்திரம நிறுத்திவைத்தல் பணத்தை கூட்டி கொடுப்பனவு செய்திருந்தது. |
| (ஆ) வருடக் கணக்காக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாத ரஹத்வத்த கோயிலை திருத்தம் செய்வதற்காக ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளால் கோயிலைச் சுற்றி வேலியொன்று அமைக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது நோக்கத்திற்கு உட்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கோவில் குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் காணியைச் சுற்றி வேலி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 03 பிதேச செயலகங்களில் ரூபா 10,660,674 தொகையான நிர்மாணங்களைப் பரீட்சித்த போது காணப்பட்ட பிழைகள் தொடர்பாக விசாரித்ததன் பின்னர் ரூபா 471,151 ஆன மிகை கொடுப்பனவு ஒப்பந்த சங்கங்களிலிருந்து அறவிட்டிருந்த போதும் நிர்ணயிக்கப்பட்டிருந்த தரத்துடன் நிர்மாணங்கள் மேற்கொள்ளாத ஒப்பந்த சங்கங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்டிருந்த உரிய தரத்துடன் நிர்மாணங்களை மேற்கொள்ளாத ஒப்பந்த சங்கங்கள் மற்றும் கடமைகளை புறக்கணித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மிகை கொடுப்பனவு அறவிடப்பட்டு அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை இருந்தால் அறவிடப்படும். |
| (ஈ) வீதியின் தடிப்பு 6’ இல்லையென சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர் 7 | உரிய தரத்துடன் நிர்மாணங்களை | மிகை கொடுப்பனவு அறவிடப்பட்டு அரசின் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்களின் நிறுத்திவைத்தல் பணத்தில் ரூபா 879,559 கழிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் குறைபாடுகள் சுட்டிக் காண்பிக்கப்பட்ட இரண்டு வீதிகளில் மிகை கொடுப்பனவு கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பொறுப்பு வாய்ந்த ஒப்பந்த சங்கங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளாத ஒப்பந்த சங்கங்கள் மற்றும் கடமைகளை புறக்கணித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை இருந்தால் அறவிடப்படும். |
| (உ) | ரூபா 990,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நானுஓய உடரதல்ல தோட்ட வீதி கிராமிய வீதியில் 50 அடி அளவிலான பகுதியொன்று முழுமையாக கொடுகள் விழுந்திருந்ததுடன் வீதியின் மத்தியில் வெடிப்புக்களும் காணப்பட்டன. | நிர்மாணம் உரிய தரத்துடன் நிறைவேற்றப் பட்டதாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை கொண்டு பரீட்சித்து நிறுத்திவைத்தல் தொகையிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | வலபனே விஹாரையின் தர்ம மண்டபத்தை புனரமைப்பு செய்யும் போது கொங்கிரீட் தளத்தின் கம்பி பதித்தல் 6'' முதல் 12'' வரையான வீச்சில் கம்பி இடப்பட்டிருந்தது. மேலும் முதலாவது மாடியில் கொங்கரீட் தட்டிற்காக பயன்படுத்தப்பட்ட கம்பிகளும் மண்ணால் மூடப்பட்ட சிதைவடைந்து வந்தன. | நிர்மாணம் உரிய தரத்துடன் நிறைவேற்றப் படுவதை மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இச்செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது இம்மாடிகள் பூர்த்தி செய்யப்பட்டு கூரைக்குப் பதிலாக இக்கொங்கிரீட் தளத்தின் மீது எவ்வித பாரமும் வைக்கப்படாமல் நீர் படிப்படியாக வழிந்தோடக் கூடிய வகையில் பூர்த்தி செய்து பராமரிப்பதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் ஆலோசணை வழங்கியுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (எ) | அம்பகமுவ பிரதேச செயலகத்தின் யன்னல்களுக்காக ரூபா 845,624 தொகை கொடுப்பனவு செய்து பாதுகாப்பு கிரில் பொருத்தும் நிர்மாண வேலைகளனி போது பாதுகாப்பு கிரில்களுக்காக சுற்றுப்புறமாக 16x5mm தட்டையான இரும்பு (Flat iron) மற்றும் நடுப்பகுதிக்கு 12x5 mm தட்டை இரும்பு பயன்படுத்த வேண்டிய போதிலும் மேல் மாடியின் மத்திக்கு 9.5x5 mm அளவிலான தட்டை இரும்பும் பாதுகாப்பு கிரிலுக்காக 16x5mm அளவினை விட குறைந்த தட்டை இரும்பும் | நிர்மாணம் உரிய தரத்துடன் நிறைவேற்றப் படுவதை மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | மிகை கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 நிதிஏற்பாட்டின் பேரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நோர்வுட் சன்ரைஸ் விளையாட்டரங்கு இரத்தினக்கல் அகழ்வுக் கைத்தொழிலொன்றுக்கும் அண்மையிலுள்ள நோவுட் கால் வாயில் மணல் எடுப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | நோக்கத்திற்குரியதாக செயற்பட வேண்டும். | நோவுட் பிரதேச சபையின் அனுமதியுடன் இவ்விளையாட்டரங்கின் மண்ணில் இரத்தின படிவு கழுவும் செயற்பாடு நடை பெறுவதால் இவ்விளையாட்டரங்கினை விளையாட்டு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் இருந்தது. |
| (ஐ) | மஹவலி கங்கையில் தடைகளை வெட்டி அகற்றும் செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது அதிகளவில் ஓரங்கள் கரைபோவதை தவிர்ப்பதற்காக கங்கையின் பிரயாண பாதை கேபியன் சுவர் இட்டு மாற்றுவதற்கும் கேபியன் சுவர்களின் பின்பகுதிக்கு மண் இட்டு நிரப்புவதற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கேபியின் சுவருக்கு பின்புறமாக மண் நிரப்பாமையால் அப்பிரதேசத்தில் நீர் தேங்குவதால் டெங்கு அபாயமொன்று காணப்பட்டது. | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சுற்றாடலுக்கு சாதகமாக நிர்மாணத்தை பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மாவட்ட பொறியியலாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் மஹாவலி அதிகார சபையின் பொறியியலாளர்களின் ஆலோசணையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஒ) | மஸ்கெலியா கிராம சேவையாளர் பிரிவு நில செவன நிர்மாணத்தின் 22 ஆம் இலக்கத்திற்காக அலுமனியம் யன்னல்களின் லூவர்ஸ் ரேட் ரூபா 16,822 ஆக இருந்த போதிலும் ரேட் ரூபா 18,019 என கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 4,261 ஆன மிகை கொடுப்பனவொன்றும் அலுமினியம் யன்னல் ரேட் J 060 இற்கான ரேட் ரூபா 13,093 ஆக இருந்த போதிலும் அவ்விலை ரூபா 19,676 என கொடுப்பனவு செய்தமையால் ரூபா 87,686 ஆன மிகை கொடுப்பனவொன்றாக இருந்தது. | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விலை விபரங்கள் டிகொடுப்பனவிற் போது பயன்படுத்தப்பட வேண்டும். | அலுமினியத்திற்காக செய்யப்பட்ட கொடுப்பனவில் மேலதிக வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நுவரெலியா பிரதேச செயலகத்தின் பதும்கம பிரிவின் பதும்கம மற்றும் பண்டாநாயக்க மாவத்தை நீர் முன்மொழிவுத் திட்டத்தின் 46 நீர்மானிகள் அனைத்து உப பாகங்களுடன் வழங்கி பொருத்துவதற்கு ரூபா 292,600 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நீர் மானியைப் பொருத்தும் போது நீர் மானிக்கு முன்னரும் பின்னரும் பொருத்த வேண்டிய கேட் வேல்வ் பொருத்தப்படாமை காரணமாக தேவையான சந்தர்ப்பமொன்றில் நீர் சங்கத்திற்கு நீரைத் துண்டிப்பதற்கு அல்லது திருத்த வேலைகளின் போது வீட்டுரிமையாளருக்கு நீரை நிறுத்திவைப்பதற்கு முடியாதிருந்ததுடன் நீர் மானக்காக எவ்வித உத்தரவாத காலமொன்றும் காணப்படவில்லை. | மதிப்பீ தயாரிக்கும் போதும் வேலை கையளிக்கும் போதும் தெளிவாக செய்யப்பட வேலைப்பகுதி குறிப்பிடப்பட வேண்டும். | கேட் வேல்வ் பொருத்தி செயற்திட்டத்தை பூர்த்தி செய்யுமாறு குறித்த சங்கத்திற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வலப்பனே பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 10 நீர் தாங்கிகளில் 02 வலப்பனே பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதிக்கும் மேலும் 02 தாங்கிகள் உதவி பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதிக்கும் நுவரெலியா பிரதேச செயலகத்திற்கும் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தன. | நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காக இப்பொருட்களை ஈடுபடுத்த வேண்டும். | வரட்சிக் காலங்களில் நீரைப் பெற்றுக்கொள்வதற்காக பாடசாலைகளுக்கும் விஹாரைகளுக்கும் நீர் தாங்கிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | கொத்மலே பிரதேச செயலக பிரிவின் புரொடொப் தமிழ் வித்தியாலயத்தின் விளையாட்டு திடலில் மண்ணை வெட்டி மட்டப்படுத்துவதற்காக ரூபா 282,112 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பிள்ளைகளுக்கு விளையாடக்கூடிய வகையில் மட்டப்படுத்தப்பட்ட நிலமொன்று விளையாட்டரங்கினுள் காணப்படவில்லை. | நிர்மாண வேலையை முறையாக நிறைவேற்ற வேண்டும். | இக்குறைபாட்டினை பூர்த்தி செய்யுமாறு 2019 மார்ச் 22, 2019 மே 09, 2019 மே 21 ஆந் திகதிகளில் ஒப்பந்தக்காரருக்கு எழுத்துமூலம் அறவிக்கப்பட்ட போதும் இதுவரை நிறை வேற்றப்படாமையால் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தின் மூலம் அமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | கொத்மலே பிரதேச செயலக பிரிவில் மண்சரிவு அபாயத்திற்குள்ளான 13 | நோக்கத்திற்காக நிர்மாணத்தை | இக்கட்டிடம் குறுகிய கால பயன்பாட்டிற்காக அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | வீடகளில் குடியிருப்பவர்களை தற்காலிகமாக தங்க வைப்பதற்கு ரூபா 106,163 செலவிடப்பட்டு வேறாக்கப்பட்டிருந்த அறைகளில் பிளைவுட் போட் கலற்றப்பட்டு சாரிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மேலும் ரூபா 58,785 கொடுப்பனவு செய்யப்பட்டு தரத்தில் அல்லாமல் பொருத்தப்பட்டிருந்த கதவு பூட்டுகளும் உடைத்து விடப்பட்டிருந்தன. | பயன்படுத்துவதாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செய்யப்பட்டதால் அதற்காக அரசின் தரப்படுத்தப்பட்ட உயர்தர மூலப்பொருட்களை பயன்படுத்த முடியாதென தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கையிட்டி ருந்ததுடன் ஆபத்து நிலைமை குறைந்ததன் பின்னர் நலனாலிகள் பழைய இடங்களில் வசிக்கின்றனர் |
| (ஈ) | (i) கிராமசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கவன்டிஷ் வகையான வாழை இலைகளைப் பயன்படுத்தி சுற்றுாடலுக்கு சாதகமான வகையில் லன்ஷீட் உற்பத்தி செய்யும் செயற்திட்டதற்காக வலபனே பிரதேச செயலகத்திற்கு ரூபா 357,000 செலவில் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் | 2018 ஆம் ஆண்டின் வாழை கன்றுகள் கொள்வனவு செய்வதற்கு தயாரான போதும் நாற்றுமேடைகளில் கன்றுகள் காணப்படாமையால் கன்றுகளை கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக பணம் கோரப்பட்டுள்ளது பிரிவில் காணப்படும் வாழை இலைகளை பயன்படுத்தி லன்ஷீட் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| | (ii) இயந்திரம் நிறுவப்பட்டுள்ள கட்டிடம் ரூபா 1,254,220 செலவில் திருத்தியமைக்கப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தில் யன்னல்களுக்காக பாதுகாப்பு கிரில் பொருத்தப்படாமையால் அவ்வியந்திரத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலொன்றாக இருக்குமென்பது அவதானிக்கப்பட்டது. | | |
| | (iii) 1500 கவென்டிஷ் வகை வாழை கன்றுகள் செயற்கையொன்று 2018 திசெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை வாழைக்கன்றுகள் கொள்வனவு செய்யப்படாமல் இருந்ததுடன் லன்ஷீட் உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | மஸ்கெலியா ஒயா பிராக்ரோ மற்றம் | நோக்கங்கள் | அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| கிரீன்லைம் பாம் பிரிவுகளில் வாய்க்காலை விரிவுபடுத்தும் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகள் தொடர்பாக முறையான நடைமுறை யொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அத்துமீறி மணல் அல்லுதல் போன்ற முறையற்ற செயற்பாடுகள் இடம் பெறுவதால் வாய்க்காலின் ஓரங்கள் அரிப்புக்குள்ளாகியிருந்தது. | நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். | உத்தியோகத்தர்களுக்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| --------------------------------------------- | -------------- | ---------------------------------------------------- |
| சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பெருந்தோட்டக் கம்பனிகளின் நீரேந்து பிரதேசங்களை பாதுகாக்கும் செயற் திட்டத்திற்காக ரூபா 3,082,500 ஆன நிதி ஏற்பாடு வலபனே பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நீரேந்துப் பிரதேசங்கள் அமைந்துள்ள காணி பகுதிகள், 40 காணித் துண்டுகள் அளவிடப்பட்டிருந்தன. அக்காணிப் பகுதிகளுக்கு தூண் அமைக்கப்பட்டு அவற்றை வேறாக்கும் செயற்பாடு நிறைவேற்றப்படாதிருந்ததுடன் செயற்திட்ட அறிக்கையும் சரியாக தயாரிக்கப்படாதிருந்தமை, தெவையான சந்தர்ப்பங்களின் போது பெறகை மதிப்பீடு தயாரிக்கப்படாமை நீர் போசிப்பிற்காக வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 700,000 தொகை மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். | நீரேந்துப் பிரதேசங்கள் அமைந்துள்ள 91 தோட்டக் காணி பகுதிகள் இருப்பதாக இனங்காணப்பட்டிருந்த போதும் 2018 நவம்பர் மாதமே நிதிஏற்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது. நில அளவைத் திணைக்களம் மற்றம் அவர்களின் கண்காணிப்பின் கீழ் திசெம்பர் முடியும் வரை அளவிடகூடிய அளவாக மாத்திரமாக இருந்ததுடன் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள நீரேந்துப் பிரதேசம் அளவிடப்பட்டிருந்தது. |

### 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் பெற்றிராத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| --------------------------------------------- | -------------- | ---------------------------------------------------- |
| வலபனே பிரதேச செயலகப் பிரிவில் திப்படுகொட ஸ்ரீ சுபதராமய 5 மாடிகளுடன் | நோக்கங்கள் நிறைவேற்றப்படும் | வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தின் |

| | | |
|---|---|---|
| கூடிய ஆசிரமம் 2008 ஆம் ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டு வநத் போதும் அதாவது 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி ஆசிரமத்தின் ஒரு அறையேனும் பயன்படுத்தக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிவல்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை இவ்விஹாரையின் ஆசிரமத்தை நிர்மாணிப்பதற்காக மாத்திரம் அரசின் வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ரூபா 6,873,981 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வகையில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். | மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. கிடைத்த பணத்திற்கு ஏற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 மே 6 ஆந் திகதி செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களுடன் மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக வரைவு கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் 05 பிரிவுகள் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கை 11 பிரிவுகளாக தயாரிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு அண்மித்ததாக இருக்க வேண்டியதுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும். | மிகவும் விரைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | செயல்நடவடிக்கை திட்டத்தில் நிறை வேற்றப்பட வேண்டியதாக | ஆண்டில் திட்டமிடப்பட்ட | இலக்குகளை இயலுமானவரை நிறை |

| | | |
|---|---|---|
| இனங்காணப்பட்டிருந்த 28 செயற்பாடுகள் ஆண்டில் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை நிறை வேற்ற முடியுமான அளவில் முயற்சி எடுக்க வேண்டும். | வேற்ற முடியுமான அளவில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பாக கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்வு திகதியான 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி மாவட்ட செயலக களஞ்சிய இருப்பு மீதி மற்றும் பௌதீக மீதிகளுக்கு இடையே 08 உருப்படிகளில் வேறுபாடு காணப்பட்டன. | களஞ்சிய ஆவணங்கள் முறையாக பேணப்பட வேண்டும் | உரிய சரிப்படுத்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ஆ) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்தி முன்மொழிவுகளின் கீழ் நலனாலிகளுக்கு வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 14 பொருள் உருப்படிகள் கணக்காய்வு திகதியான 2018 நவம்பர் 05 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி பொருட்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய அனைத்துப் பொருட்களும் தற்போது பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த விளையாட்டு உபகரணங்களும் கதிரை களும் உறுப்பினர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட சங்கங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2016 ஆம் ஆண்டில் 1000 லீற்றர் தாங்கிள் 40 உம் 2017 ஆம் ஆண்டில் 02 நீர் பௌசர்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித ஆவணமொன்றோபா கோவையொன்றோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 09 நீர் தாங்கிகள் எந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பான உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அறிக்கைகள் முறையாக பேணப்பட வேண்டும். காணாமல் போன நீர்தாங்கிகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட வேண்டும். | ஆவணங்களையும் கோவைகளையும் நாளதுவரை பேணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) 04 பிரதேச செயலகங்களுக்குரிய எந்தவொரு கிராம சேவையாளரும் பொருட் பதிவேட்டினை பயன்படுத்தாமல் இருந்ததுடன் | நிதிப் பிரமாணம் 454 இன் பிரகாரம் பொருட் பதிவேடு பயன்படுத்தப்பட | சகல கிராம சேவையாளர்களுக்கும் இது தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | கொப்பிகள் அல்லது ஹாப்ஷீட்களில் பொருட் பதிவேட்டை உள்ளடக்ககியிருந்தனர. | வேண்டும். | அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 05 பிரதேச செயலக பிரிவுகளில் பரிசோதனைக்கு உட்படுத்திய 61 கிராம சேவையாளர் அலுவலகங்களில் பொருட் பதிவேடுகள் எதுவும் பரிசோதனைக்கு பொருள் மெய்மையாய்விற்கோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பொருட் பதிவேட்டினைப் பயன்படுத்தாத 11 அலுவலகங்கள் காணப்பட்டன. | நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் அனைத்து திணைக்களங்களில் பொருட்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 மார்ச் 12 ஆந் திகதிய நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போதும் பிரதேச கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. கிராம சேவையாளர் மட்டத்தில் பதிவேடுகள் பேணிச் செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கிராம சேவையாளர் மட்டத்தில் பதிவேடுகளைப் பேணிச் செல்வதற்கும் பொருள் மெய்மையாய்வினை மேற் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. |
| (ஊ) | தொழில் பயிற்சி நிலையத்தின் 3 கட்டிடங்கள் ரூபா 1,873,635 செலவில் நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதும் எவ்வித பயிற்சி செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கட்டிடங்களின் உட்கூரை முழுமையாக சிதைவடைந்து கொமட் மற்றும் கதவு யன்னல் உடைந்தும் மின் உதிரிப் பாகங்கள் கலற்றப்பட்டு சுற்றி புட்கள் வளர்ந்து சுவர் மற்றும் தின்னையில் பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டிருந்தன. | கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | தற்போது இக்கட்டிடம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்நாட்டு உணவு தயாரிப்பு செயற்திட்டம் மற்றும் பல்வகை உணவுச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | வலபனே பிரதேச செயலகப் பிரிவில் களஞ்சியம் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழ் நலனாலிகளுக்கு பகிர்ந்தளிக்க கிடைத்த பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் பௌதீக ரீதியில் கணக்கிடுவதற்கு சிக்கலான வகையில் முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | களஞ்சியம் முறையாக பேணப்பட வேண்டியதுடன் கிடைத்த பொருட்களை காலரீதியாக பகிர்ந்தளிக்க வேண்டும். | குறிப்பான களஞ்சிய உத்தியோகத்தரொரு வருக்கு கையளிக்கப் பட்டுள்ளது. களஞ்சியம் முறைப்படுத்தப்பட்டுள்ளது . |

**3.8 நட்டங்களும் சேதங்களும்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 யூலை 11 ஆந் திகதி நுவரெலியா பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்றுக்கு இடம்பெற்ற வாகனம் தொடர்பாக 2018 யூலை 12 ஆந் திகதி ஆரம்ப பரிசோதனை நியமிக்கப்பட்ட போதும் குறித்த அறிக்கை கணக்காய்வு திகதியான 2019 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நுவரெலியா பிரதேச செயலகத்தினால் ரூபா 485,000 செலவில் கந்தபொல ஹெதர் செட் தோட்ட நடுப்பகுதிக்கு நீர் வழங்குவதற்காக நீர்தாங்கி நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் நீர் தாங்கிக்கு மூடியொன்று இல்லாமையால் இலைகள், துகள்கள், தூசு மற்றம் கழிவுகள் நீருடன் கலக்கும் ஆபத்தொன்றும் நீரேந்துப் பிரதேசத்தில் நீரின் தூய்மை தொடர்பான ஆபத்தொன்றும் காணப்பட்டது. | நீரின் சுத்தம் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். | அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,848,536 ஆன வாழ்க்கை செலவினத்தில் ரூபா 1,164,638 ஆன ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை முறையாக நிறை வேற்ற வேண்டும். | இரண்டு இராணுவ ஓய்வூதிய செலுத்தும் உத்தியோகத்தரின் வாழ்க்கை செலவினக் கொடுப்பனவு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சம்பளம் ஓய்வூதியம் இரண்டு நிறுவனங்களினால் செலுத்தப்பட்டமையால் |

| | | | |
|---|---|---|---|
| | | | இடம்பெற்றுள்ளது. |
| (இ) | வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 ஒக்தோபர் 27 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 4,081,987 தொகையில் அங்கீகாரமின்றி 05 சமுதாய வங்கிகளால் 2019 மார்ச் 21 ஆந் திகதி வரை வைப்பிலிடப்பட்டிருந்தது. | தாமதமின்றி இப்பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தலைமையலுவலக முகாமையாளருக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | போஷாக்கு படிகளுக்குரிய குறைபாடு களுடனான விண்ணப்பங்களை அக்கர்ப்பிணிகளுக்கு வழங்கி குறைபாடுகளை சீர் செய்யாமல் கோவைப்படுத்தியிருந்த காரணத்தினால் 11 கர்ப்பிணிகளுக்கு ரூபா 20,000 நலன்கள் கிடைக்காமல் போயிருந்தது. | உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றுவதை கவனத்தில் கொள்ள வேண்டியதுடன் மேற்பார்வை செயற்பாடு முறைப்படி நிறைவேற்றப்பட வேண்டும். | புதிய விட உத்தியோகத்தரொரு வரை நியமித்து குறைபாடுகள் இல்லாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (உ) | நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட 80 ஷிப்தொர புலமைப் பரிசில்களில் 42 புலமைப் பரிசில் பெறுவோர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் குறித்துரைக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட திகதியில் செயற்பாடு நிறைவேற்றப் படாமையால் எஞ்சிய 38 புலமைப்பரிசில்கள் ஏனைய 04 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை முறையாக நிறை வேற்ற வேண்டும். | குறிக்கப்பட்ட திகதிகளில் தமது கடமைகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடம் விடுவிப்பிற்குகாரணங்கள் கோரப்பட வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய இலக்குகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயபாரிக்கப்படாதிருந்ததுடன் குறித்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக தேவையான அடைவுகள் இனங்காணப்படாமை இனங்காணப்பட்ட நோக்கங்கள் நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத்திட்டத்திற்க உள்ளடக்கப்பட வேண்டும். | தாமதமின்றி இலக்குகள் தாபிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 5. நல்லாளுகை

### பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தகவல் அறியும் சட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 04 சந்தர்ப்பங்களில் கோரப்பட்ட தகவல்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரை நுவரெலியா பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி இலக்குகள் தாபிக்கப்பட வேண்டும். | தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் கீழ் தகவல்களை வழங்குமாறு உத்தியோத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

## 6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்திற்கும் 05 பிரதேச செயலகங்களுக்கும் 11 அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 10 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட 566 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் 160 வெற்றிடங் களாகவும் 10 உதவிப் பணிப்பாளர் பதவிகளில் 03 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாவட்ட செயலகத்திலும் 05 பிரதேச செயலகங்களிலும் 07 அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர் பதவிகளில் 05 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. |
| (இ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நியமனம் கிடைத்த இரண்டு உத்தியோகத்தர்கள் மருத்துவ சான்றிதழ்களை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை 2018 ஒக்தோபர் மாதம் 23 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறயிப்பட்டது. | தாமதமின்றி மருத்துவ அறிக்கைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். | துரிதமாக அந்த உத்தியோகத்தர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கை பெறப்பட்டு தனிப்பட்ட கோவையில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமனம் கிடைத்த ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தின் 128 அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 118 பேர் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதிய முறைமையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி பதிவு செய்யும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும். | விதவைகள் மற்றும் அநாதை ஓய்வூதிய முறைமையில் புதிய பதிவின் கீழ் 20 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் எஞ்சிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பதிவுசெய்தல் மேற்கொள்ளப்பட உள்ளது. |
| (உ) | தகுதிகான் காலம் பூர்த்தி செய்து சேவையில் நிரந்தரமாகுவதற்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தின் 06 உத்தியோகத்தர்களின் | பிரத்தியேக கோவைகள் முறையாக பேணப்பட வேண்டும். | துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை |

| | |
|---|---|
| நியமனங்களை நிரந்தரமாக்குவதற்காக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதில் தாமதமொன்று காணப்பட்டது. | வழங்கப்பட்டுள்ளது. |